**<u>சுற்றறிக்கை</u>**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் (ஆதிந3) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9

<u>கடிதம் (நிலை) எண். 13724/ஆதிந3/ 2014–1 நாள் 9.2.2015</u>

அனுப்புநர்
முனைவர் கண்ணகி பாக்கியநாதன், **இ.ஆ.ப.,**
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
கல்லூரிக்கல்வி,
சென்னை-600 006

-------------------------

ஆணையர்,
தொழில்நுட்பகல்வி,
சென்னை-600 025.

-------------------------

இயக்குநர்,
மருத்துவக்கல்வி,
சென்னை-600 010.

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து கல்லூரிகளிலும் தகுதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களிடமிருந்து கற்பிப்பு கட்டணம் (Tuition fees வசூல் செய்ய கூடாது என சுற்றறிக்கை அனுப்புதல் தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.722, சமூகநலத்துறை நாள் 13.10.1977.

--------

பார்வையில் காணும் அரசாணையின்படி (P.U.C. படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளுக்கு) கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் அவர்கள் கற்பிப்பு கட்டணம் (Tuition Fees) செலுத்துவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆணையினை பின்பற்றி அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்திற்கான தொகையானது வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2. அதே போன்று அரசாணை (நிலை) எண்.92, ஆதி(ம)பந துறை நாள் 11.9.2012ன்படி அனைத்து சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச /கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்கள் அவர்கள் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த "சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு" நிர்ணயித்த கல்வி கட்டணங்களை மட்டும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் அரசே நேரடியாக வழங்க ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணை நடைமுறையில் உள்ள நிலையில் அரசு /அரசு உதவி பெறும் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பெரும்பாலான கல்லூரிகளில், ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களிடமிருந்து கற்பிப்பு கட்டணம் (Tuition fees) வசூலிக்கப்படுவதாக பல்வேறு புகார்கள் மனுக்களாகவும் மற்றும் தொலைபேசி மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் அலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளது.

4.மேற்குறிப்பிட்டுள்ள நிலையில், சுயநிதி கல்லூரிகளில் அனைத்து பாடப்பிரிவுகளிலும் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களிடம் அரசாணை (நிலை) எண்.92, ஆதி(ம)பந துறை நாள் 11.9.2012ன்படி அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு கட்டாய திருப்பி செலுத்தப்படாத கட்டணங்களை (கற்பிப்பு கட்டணங்கள் உட்பட) அரசே செலுத்தும் நிலையில், அரசு /அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தும் அம்மாணாக்கர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலிப்பது என்பது அரசு ஆணைகளுக்கு மாறுபட்ட / முறையற்ற செயல் என்பதால், அரசு /அரசு உதவி பெறும் கல்லூரிகளில்" பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களிடம் "கற்பிப்பு கட்டணம் வசூலிக்ககூடாது" என்பதனை வலியுறுத்தி கேட்டு கொள்கிறேன். மேலும் ஒவ்வொரு ஆண்டும் அதற்கான தொகையினை தொடர்புடைய கல்வித்துறை இயக்கக தலைமையகத்தின் வழியாக ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு கருத்துரு அனுப்பி கற்பிப்பு கட்டணத்தினை பெற்றுக் கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

5. மேலும், Scheduled Castes/Scheduled Tribes /Scheduled Caste Converted Christian மாணவ/மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை விவரத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திற்கு இத்துறையின் சார்பாக தெரிவிக்க வேண்டியுள்ளதால், மேற்காணும் பொருண்மைகள் மீது தனிகவனம் செலுத்துமாறும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

ஞா. தங்கம்
9.2.15

அரசுச் செயலாளருக்காக

நகல்:–
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலன், சென்னை–5.
இயக்குநர்,
பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து அரசு /அரசு உதவி பெறும்
கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.(இயக்குநர் ஆதிந, மூலமாக)
அனைத்து அரசு /அரசு உதவி பெறும்
பொறியியல் கல்லூரிகள்
அனைத்து அரசு /அரசு உதவி பெறும்
பாலிடெக்னிக் கல்லூரிகள்
அனைத்து அரசு /அரசு உதவி பெறும்
மருத்துவ கல்லூரிகள்
அனைத்து அரசு /அரசு உதவி பெறும்
கல்வியியல் கல்லூரிகள்
அனைத்து அரசு /அரசு உதவி பெறும்
பல்கலைக்கழகங்கள்